# திராவிட சினிமா

**16**

**திராவிடக் கொள்கைகளை, சமதர்ம நோக்கங்களை, சமூகநீதிச் சிந்தனைகளைத் திரைத்துறை மூலம் மக்களிடம் கொண்டு சேர்த்தனர் நமது முன்னோடிகள். அந்த வகையில் திரைப்படம் என்கிற நவீன ஊடகத்தின் மூலம் அரசியல் மாற்றத்துக்கான திருப்புமுனைகளை உருவாக்கின, திராவிடம் பேசிய திரைப்படங்கள். அந்த வரலாற்றை மீண்டும் வாசிக்கத் தருகிறது திராவிட சினிமா.**

# புதுமைப்பித்தன் கலைஞர் கொடுத்த பட்டம்!

■ **வீ.மா.ச.சுபகுணராஜன்**

*1957-ஆம் ஆண்டு வெளிவந்த 'புதுமைப் பித்தன்' திரைப்படம்தான் கலைஞரும், எம்.ஜி.ஆரும் 'மலைக் கள்ளன்' (1954) திரைப் படத்துக்குப் பின்னர் இணைந்து பணியாற்றிய படம். டி.ஆர்.ராமண்ணா இயக்கத்தில் ஜி.ராம நாதன் இசையில் வெளிவந்த மாபெரும் வெற்றிப்படம்.*

*ஒரு கல்லூரிப் படிப்பின் இறுதியில் **'பட்டம்'** வழங்கப்படுவதைப்போல, எம்.ஜி.ராமச்சந்தர் ஆக இருந்தவரின் பெயர் மாற்றம் செய்யப்பட்டதும், 'புரட்சி நடிகர்' எனப் பட்டம் வழங்கப்பட்டதும் இந்தப் படத்தில் இருந்துதான்.*

*படத்தின் காட்சியொன்றில், ஒரு நாடகக்குழுவில் மாறுவேடத்தில் (உண்மையில் இளவரசன்) தன்னை "பகலிலே பித்தன். இரவிலே புதுமைப்பித்தன்" என்பான் ஜீவகன். இன்பவள்ளி, "யார் இந்தப் புரட்சிக்காரர்" எனக் கேட்கிறாள். ஜீவகனைக் (எம்.ஜி.ஆர்) காட்டி, 'இவர் யாரென்று தெரியுமா? பெரிய புரட்சி நடிகர்' என்கிறார் இளவரசரின் நண்பன் அறிவுமணி (சந்திரபாபு).*

*ஆம், எம்.ஜி.ஆர் நடித்த திரைப்படத்திலேயே அவருக்கு 'புரட்சி நடிகர்' என்ற பட்டத்தை வழங்கியது கலைஞரின் எழுத்து. அதாவது, ராமச்சந்தர் ஆக இருந்தவரை ராமச்சந்திரன் ஆக்கி, ' புரட்சி நடிகர் ' பட்டமும் வழங்கியவர் கலைஞர். இந்தத் திரைப்படம் உள்ளிட்ட அதுவரையான படங்களில் 'புரட்சி நடிகர்' முன்னொட்டு இணைக்கப்பட்டிருக்கவில்லை என்பது மனங்கொள்ளத்தக்கது.*

## மூன்று பெண்கள்

*அண்ணனிடமிருந்து அரியணையைக் கைப்பற்ற சதி செய்யும் தம்பி பிரதாபன் (டி.எஸ்.பாலையா). கடல் கடந்து, போரில் வென்று திரும்பும் இளவரசன் ஜீவகனை (எம்.ஜி.ஆர்), தந்தையின் மரணச் செய்தியோடு வரவேற்கிறான். அவனது சதியை வெளிப்படுத்தி, தந்தையை மீட்டு, நாட்டையும் மக்களையும் மீட்கிறான் ஜீவகன். சதியின் பகுதியான இளவரசனைப் பித்தனாக்கும் திட்டத்தைத் தனக்குச் சாதகமாக்கி, 'புதுமைப்பித்தன்' ஆக நடித்து அதனை முறியடிக்கிறான் ஜீவகன்.*

*அவனது இந்த முயற்சிக்கு, தாமாக முன் வந்து மூன்று பெண்கள் துணையாகச் செயல்பட்டு அவனை வெற்றி பெறச் செய்கிறார்கள். முதலாமவள், அரச வைத்தியர் துன்முகியின் மகள் வேள்விழி (பி.எஸ்.சரோஜா). இரண்டாமவள்,*





*அரண்மனைச் சேடிப் பெண் அபராஜிதா (ஈ.வி.சரோஜா). மூன்றாமவர், புரட்சியாளர்களான நாடகக் குழுவினரின் தலைவி இன்பவள்ளி (டி.ஆர்.ராஜகுமாரி). எம்.ஜி.ஆர் திரைப்படங்களில் ஒன்றுக்கும் மேற்பட்ட பெண்களால் காதலிக்கப்படும் நாயகன் என்ற ஃபார்முலாவும் இந்தப் படத்தின் மூலமாக உருவாக்கப்பட்டிருக்கும் வாய்ப்புள்ளது. தாமாக முன் வந்து உதவும் பெண்கள் என்ற பாத்திர அமைப்பு மிகுந்த கவனத்துக்குரியது.*

## நாயகனுக்கு உதவும் பெண்கள்

*இவர்களில் முதன்மையானவள் வேள்விழி. ஜீவகன் கரையிறங்கியவுடன், அப்பாவின் மரண அறிவிப்பு கேட்டு கலங்கி நிற்கும் போது, சதியைப் பற்றியும்,அவனது தந்தை / அரசர் உயிருடன் இருப்பதையும், அவர் பாதாளசிறையில் அடைக்கப் பட்டிருப்பதையும் அவனுக்குத் 'துண்டுச் சீட்டு' தகவலாகத் தெரிவிப்பவள். ஆம், அரண்மனை வைத்தியர் துன்முகியின் மகளான அவள், ஜீவகனை இளவயதிலிருந்து காதலிப்பவள்.*

*சதியின் பகுதியாக, அதிலும் பிரதானப் பகுதி யான 'பித்த மருந்து 'தயாரிப்பது தனது தந்தை என்று அறிந்தும், அவரது உயிருக்குப் பாதுகாப்பு மட்டும் கோரி, சதியை வெளிப்படுத்துகிறாள். அவளது பங்களிப்பே ஜீவகனது செயல்பாடுகளுக்கான களமாகவும் ஆகிறது. அவர்களுக்குள் காதல் மலரவும் காரணமாகிறது.*

*கதைப் போக்கில் முகமூடி மனிதனாக ஜீவகன் போலி அரசன் சித்தப்பாவுக்கு எதிராகச் செயல்பட அவனைப் பிடிக்க உத்தரவாகிறது.*




*அறிவிப்பாளனை, 'ஏன் முகமூடி மனிதனைத் தேடுகிறீர்கள். அவர் செய்த கொலை, கொள்ளைக் குற்றம் என்ன?' என்று கேட்கிறாள் ஆண் வேடத்திலிருக்கும் வேள்விழி. அரசப் பிரதிநிதி மன்னரின் ஆணைக்கெதிராகப் பேசுபவர்களுக்கு என்ன தண்டனை தெரியுமா? என மிரட்ட, வேள்விழி, திராவிட இயக்கத்தவர் மொழியில், "தெரியும். 'ம்' என்றால் சிறைவாசம். ஏன் என்றால் வனவாசம். புத்திகெட்டவர்கள் நடத்தும் போலி துரைத்தனத்திலே புதுமை விரும்பிகளுக்கு என்ன தண்டனை என்பது நன்றாகத் தெரியும்" எனத் துணிச்சலாகப் பதிலளிக்கிறாள்.*

*இரண்டாவது பெண் அபராஜிதா. அரண்மனைப் பணிப்பெண் (அடிமைப் பெண்). அவளது காதல் அறிவுமணியோடுதான் என்றாலும், அவளும் அரண்மனை சதியாலோசனைகளை ஜீவகனுக்குத் தெரியப்படுத்தி, அவனது செயல்பாடுகளுக்குத் துணையாக இருக்கிறாள்.*

*மூன்றாவது பெண் இன்பவள்ளி, நாடகக்குழுவின் தலைவி. அந்த நாடகக்குழு, அரண்மனை அதிகார அத்துமீறல்களுக்கெதிரான புரட்சிக்காரர்களின் கூடாரம். மக்களிடையே நாடகங்களின் மூலமாக அக்கிரமங்களை வெளிப் படுத்தி, ஒரு போராட்டத்துக்கான கருத்து விதையை விதைப்பவர்கள். இன்பவள்ளியும் ஜீவகன் மீது காதல் கொள்கிறாள். அவனது திட்டத்துக்கு உதவத் தனது சாகசத்தைக் கருவியாக்குகிறாள். இறுதியில், அந்த முயற்சியில் தனது இன்னுயிரை ஈந்து தியாகம் செய்கிறாள். கலைஞர் திரைப்படத்தில் நாடகக்குழுவின் பங்களிப்பு ஆச்சர்யமானதில்லை. தி.மு.க.வின*

**எம்.ஜி.ஆர் திரைப்படங்களில் ஒன்றுக்கும் மேற்பட்ட பெண்களால் காதலிக்கப்படும் நாயகன் என்ற ஃபார்முலாவும் இந்தப் படத்தின் மூலமாக உருவாக்கப்பட்டிருக்கும் வாய்ப்புள்ளது.**

*ரையே 'கூத்தாடிகள்' என்றுதானே அரசியல் எதிரிகள் இழிவு செய்தனர்.*

## பித்தமொழியில் பேசப்படும் அரசியல்

*ஜீவகன் பித்தனாக நடிக்கும் போது பேசும் வசனங்கள் வேடிக்கையாகவும் பொருள் நிறைந்தவையாகவும் இருந்தன. பல வசனங்கள் பின் நாட்கள் வரை கலைஞரின் உரைகளின் பகுதியாகத் தொடர்ந்தன. பித்தனாகப் பேசத் தொடங்கியதும், "ஆண்டவனைக் கொன்று விட்டது இந்தக் கானகத்து வேங்கை. ஆம் இந்த நாட்டை ஆண்டவனைக் கொன்றுவிட்டது" எனச் சித்தப்பா பிரதாபனை இடித்துரைப்பான். "முப்பாலும் பாழ் அதற்கப்பாலும் பாழ் என்றார் திருமூலர்" என ஞானம் பேசுவான். "என்னைப் போன்ற ராஜகுமாரர்களுக்கு உண்ண மனித மாமிசம் வேண்டும். போர்ப் பகைகளின் வேர்வை யில் குளித்து, அவர்களின் தசைகளை விருந்தாக உண்டு, அவர்களின் கண்ணீரை பானமாக அருந்த வேண்டும்" என்பான். அரசர்கள், இளவர சர்கள், போர்கள் பற்றிய கொடூரமான சித்திரத்தை எவ்வளவு பொருத்தமான பாத்திர வார்ப்பு மூலமாகச் சொல்கிறார் கலைஞர். பேசுவது 'பித்த மொழியில்' என்றாலும் பேசுபவன் 'பாவனையாகவே' அதைச் சொல்கிறான்.*

*பித்தமொழியில் மட்டுமல்ல, இயல்பான மொழியிலும் கலைஞரின் கிண்டலுக்குக் குறை யில்லை. பாலையா கோபத்தில் "சேனாதிபதி யென்றால் யாரென்று தெரியுமா?" என்று முகமூடி மனிதனை, 'கோட்டை' விட்டு வந்து நிற்கும் சேனாதிபதியிடம் கேட்க, ஓர் உதவியாளன், அகராதியொன்றிலிருந்து, "சேனாதிபதி என்றால் சேனையின் அதிபதி. சேனை என்பதை ஒருவகைக் கிழங்கு என்றும் சொல்லலாம்" என்று வாசிக்கிறான்.*

*'புதுமைப்பித்தன்' படத்தில் எம்.ஜி.ஆருக்கு பல பரிமாண நடிப்பு மற்றும் சண்டைக் காட்சி வாய்ப்புகளுக்கான களம் உருவாக்கப் பட்டு அவரும் நகைச்சுவை, பெண் வடிவில் ஆடுதல் போன்றவற்றைச் சிறப்பாகச் செய்துள்ளார். ஆம், எம்.ஜி.ஆர் எனும் நடிகருக்கான பயிற்சிக்களம் முழுமையாகி **'புரட்சி நடிகர்'** பட்டமும் வழங்கப்பட்டது. இந்தப் படத்தின் சாயலை அவரே இயக்கிய மாபெரும் வெற்றிப்படமான **'நாடோடி மன்னன்'** படத்திலும் காணலாம்.*

...படம் விரியும்

## மக்களின் மனசாட்சி!

பெருமை மிகு இந்திய நாடாளுமன்ற வரலாற்றைக் கடந்த ஒன்பது ஆண்டுகளாக ஒன்றிய பாஜக அரசு சிதைத்து வருகிறது. நாட்டின் பிரதமர் நாடாளுமன்ற விவாதங்களில் கலந்துகொண்டதே இல்லை. தற்போது இந்திய ஒருமைப்பாட்டுக்கு சவால்விடும் மணிப்பூர் விவகா ரத்திலும் பிரதமர் நாடாளுமன்றத்தில் விளக்கம் அளிக்கவில்லை. ஆனால் வெளிநாட்டுப் பயணம், தேர்தல் பிரச்சார மேடை களில் மட்டும் அதிக நேரம் செலவிடுகிறார்.

2021-ஆம் ஆண்டில் மேற்கு வங்கத்தில் மட்டும் தேர்தல் பிரச்சார மேடைகளில் 11 மணி நேரத்துக்கு மேல் செலவிட்ட பிரதமர், அந்த ஆண்டில் நாடாளுமன்றக் கூட்டத்தொடர்களில் நான்கு மணி நேரங்கள் மட்டுமே வருகை தந்துள்ளார். ஒன்பது ஆண்டுகளில் பிரதமர் அலுவலகம் 13 கேள்விகளுக்கு மட்டுமே பதில் அளித்துள்ளதாக குற்றம் சாட்டியுள்ள நாடாளுமன்ற உறுப்பினர் 'டெரிக் ஓ பிரைன்', மக்கள் பிரதிநிதிகளுடன் பேச மறுக்கும் பிரதமர், வானொலிகளில் மட்டும் பேசுவது அர்த்தமற்றது என விமர்சனம் செய்துள்ளார்.

நாடாளுமன்றத்தைக் கோயிலாக நினைக்கிறோம் என படிக்கட்டுகளைத் தொட்டு வணங்கினார் பிரதமர் மோடி. ஆனால், நாடாளுமன்றத்தை கோயில் போல கையாள முடியவில்லை. அது மக்கள் மனசாட்சியின் இடம். சுடும். அந்த அச்சமே மோடியை அவையில் இருக்கவிடவில்லை. அது நாடாளுமன்றத்துக்கு வெளியிலும் விரைவில் நீடிக்கும். 'இந்தியா அதைச் செய்யும்'.

## :.ப்ளாஷ்பேக்





சேங்கைமாறன்

### சேராத மோதிரம்!

சிவகங்கை மாவட்டக் கழகம் சார்பில் 1991-ஆம் ஆண்டு தேர்தல் நிதியளிப்புக் கூட்டம் தேவ கோட்டையில் பசும்பொன் தா.கிருட்டிணன் எம்.பி. அவர்களின் தலைமையில் நடைபெற்றது. கூட்டத்தில் முத்தமிழறிஞர் டாக்டர் கலைஞர் அவர்கள் கலந்துகொண்டு சிறப்புரையாற்றினார். அந்நேரத்தில் சிவகங்கை மாவட்ட இளைஞர் அணி அமைப்பாளராக இருந்த எனக்கு அதிக நிதி வசூல் செய்து கொடுத்ததற்காக முத்தமிழ் அறிஞர் டாக்டர் கலைஞர் அவர்கள் மோதிரம் அணிவித்தார். அப்போது அனைவருக்கும் ஒரே மாதிரியான மோதிரங்கள் அணிவித்தார்கள். என் விரலுக்கு தலைவர் அணிவித்த மோதிரம் சேரவில்லை என்றவுடன் "என்னையா உனக்கு மோதிரம் சேர மாட்டேன் என்கிறது" என்றார், மேடையி லிருந்த அனைவரும் சிரித்துவிட்டார்கள். நம் தலைவரின் சிரிப்பைப் பார்த்து நானும் சிரித்து மகிழ்ந்தேன், என் வாழ்வில் கிடைத்த பெரும் பாக்கியம் தலைவரிடம் மோதிரம் பெற்றது.

**-த.சேங்கைமாறன், சிவகங்கை மாவட்டக் கழகத் துணைச் செயலாளர், திருப்புவனம்.**


இது போன்ற அரிய புகைப்படங்களை சிறு குறிப்புடன் எங்களுக்கு அனுப்புங்கள். அலைபேசி எண் அவசியம். அனுப்ப வேண்டிய முகவரி: அன்பகம், 614, அண்ணா சாலை, தேனாம்பேட்டை, சென்னை-600 018. வாட்ஸ்அப் எண்: 90033 – 24473 மின்னஞ்சல் youthwing@dmk.in

## கருவூலம்

### மாநாட்டுப் பொருளாளர்

**1958 - ஆம் ஆண்டு மே மாதம் 10 மற்றும் 11 ஆம் தேதிகளில் தஞ்சாவூர் மாவட்ட மாநாடு திருவாரூரில் நடைபெற்றது. அந்த மாநாட்டின் பொருளாளராகப் பணி யாற்றினார் கலைஞர். கழகத்தின் நிதி தேவைகளுக்காக 'உதயசூரியன்' நாடகம் மூலம் நிதி திரட்டி வந்த கலைஞருக்கு, திருவாரூர் மாநாட்டில் பொருளாளர் பொறுப்புப், பரிசோதனைக் களமாகப் பயன்பட்டது. மாநாடு போன்ற பொது நிகழ்ச்சியை சிக்கனமாகவும், அதே நேரத்தில் சிறப்பாகவும் நடத்த முடியும் என்பதை, கலைஞர் அந்த மாநாட்டில் நிரூபித்துக் காட்டினார். கழகத்தின் பொருளாளராகப் பணியாற்றுவதற்கு அந்த மாநாட்டுப் பணி சிறந்த அனுபவமாக இருந்தது, எனக் கலைஞர் குறிப்பிட்டார்.**

## திராவிடத்தால் வாழ்கிறோம் 192




எழுத்து : கோவி.லெனின்
ஓவியம் : கி.சொக்கலிங்கம்

-வாழ்வோம்

Published and Printed by Karthikeyan Shanmugasundaram On behalf of Murasoli Trust at Murasoli Achagam, No:180, Kodambakkam High Road, Chennai - 600 034 Editor : Karthikeyan Shanmugasundaram Regn. No.7436, TN/CH (C) 261/21 - 23 RNI No.1244/57 WPP.No.TN/P.M.G. (CCR) W.P.P. 355/21-23. Phone : 28179191, 28179131